**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**O.S.No.39/2019**

பெயர் :– தமிழரசி (P.W.–)
க/பெ. :– நடேசன்
தேதி :– 05.08.2025.
சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.
1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

என்ன பரிகாரம்கேட்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் எனது கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்து எனக்கு பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ஆரம்பத்தில் வழக்கு சொத்தானது நடேச செட்டியாருக்கு சொந்தமானது. அந்த நடேச செட்டியார் எனது மாமனாரின் தகப்பனார் ஆவார். நடேச செட்டியாருக்கு இரண்டு மனைவிகள் உண்டு. எனது மாமனாருக்கு தனபாக்கியத்தம்மாள், மங்களத்தம்மாள் என்று இரண்டு மனைவிகள் என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நடேச செட்டியாருக்கு கிருஷ்ணமூர்த்தி செட்டியார் என்று ஒரே மகன். கிருஷ்ணமூர்த்தி செட்டியாரின் மனைவி லீலாவதி அம்மாள் ஆவார். கிருஷ்ணமூர்த்தி செட்டியாருக்கு அருமைநாதன், ராஜா, காவேரி, கமலா, தனசேகரன், நடேசன், விஜயகுமார், இந்திரஜோதி, ஜோதி ஆகியோர்கள் வாரிசுகளாவார்கள். மேற்படி நபர்களில் காவேரி, கமலா, எனது கணவர் நடேசன் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள். கமலா திருமணம் ஆகி இறந்துபோனார். காவேரி திருமணம் ஆகி இறந்துபோனா என்ற விபரம் எனக்கு தெரியாது. எனது கணவர் நடேசனுக்கு நானும் கார்த்தி, இரண்டாவது வாதியும் வாரிசுகளாவார்கள். அதில் கார்த்தி என்பவர் திருமணம் ஆகாமலேயே இறந்துபோனார்.

தாவா சொத்து என்பது எனது மாமனாரின்தகப்பனாரான நடேச செட்டியார் 16.03.1936 ஆம் வருடம் கிரயம் வாங்கிய சொத்தாகும். நடேச செட்டியாருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தான் நான் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் நடேச செட்டியார் மூலமாக கிருஷ்ணமூர்த்தி செட்டியாருக்கு கிடைத்த வகையில் நான் பாகம் கேட்கிறேன். நடேச செட்டியார் உயிருடன் இருக்கும் காலத்தில் அவர் 1936 ஆம் ஆண்டு கிரயம் பெற்ற காலத்தில் சொத்து சம்பந்தமாக ஒரு உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு என்ன எதிர்கட்சி சொல்லுகிறார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி நடேச செட்டியார் உயிருடன் இருக்கும் காலத்தில் அவரது மனைவி தனபாக்கியம் அம்மாள் ஆயுள் பரியந்தம் ஆண்டு அனுபவித்து வந்து அவரது காலத்திற்கு பிறகு 1, 2 பிரதிவாதிகளான அருமைநாதன் ராஜா ஆகிய் இருவரும் அடைந்து கொள்ளுவது என ஒரு உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்குதெரியும். அந்த மாதிரி உயில் எழுதும் காலத்தில் 1, 2 பிரதிவாதிகள் மைனர் என்றால் சரிதான். அந்த உயிலை அனுசரித்து 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை தனக்கு பாத்தியப்பட்டது என சொத்துக்கள் வசம் ஒப்பிக்கவேண்டி வரும்படிக்காகவும் மயிலாடுதுறை சார்பு

நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 71/1987 என்று வழக்கு தாக்கல் செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும்.

மேற்படி வழக்கானது எனது மாமனார் கிருஷ்ணமூர்த்தி செட்டியாருக்குதான் சாதகமாக தீர்ப்பானது என்ற விபரத்தை தெரிந்துகொண்டேன். அந்த தீர்ப்பினை எதிர்த்து 1, 2, பிரதிவாதிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டிற்கு சென்றார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த மேல்முறையீடானது நிலுவையில் இருக்கும்போது கிருஷ்ணமூர்த்தி செட்டியார் 09.04.1991ல் காலமாகிவிட்டார். மேற்படி வழக்கானது வாரிசுகள் சேர்க்காததால் தகுதியின் அடிப்படை இல்லாமல் தள்ளுபடி ஆகிவிட்டது என்ற விபரம் எனக்கு விபரமாக தெரியாது. வழக்கு விபரங்கள் தெரிந்துகொள்வதற்காக நீதிமன்றத்தில் Suit Register நகல் வாங்கி தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சொத்துக்கள் நடேச செட்டியார் எழுதிவைத்ததன் பேரில் அருமைநாதனுக்கும், ராஜாவுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரியல். அதன் பிறகு எனது மாமனார் கிருஷ்ணமூர்த்தி செட்டியார் தாவா சொத்துக்கள் அவரது வாரிசுகளான 8 நபர்களுக்கும் பாத்தியப்பட்டது என வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த 8 நபர்களுக்கும் பாத்தியப்பட்டது என கிருஷ்ணமூர்த்தி தாக்கல் செய்த வழக்கின் விபரத்தினை எனது பிராதில் சொல்லியுள்ளேன்.

இது நாளது தேதிவரை கிருஷ்ணமூர்த்தி தாக்கல் செய்த வழக்கு சம்பந்தமாக எந்தவித ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தற்போது வழக்கிற்காக பொய்யாக கிருஷ்ணமூர்த்தி வழக்கு தாக்கல் செய்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தி செட்டியாரான எனது மாமனார் அவரது வாரிசுகளுக்கு ஒரு உயில் பத்திரம் எழுதிவைத்துள்ளார். அதன் அடிப்படையில் நாங்கள் சொத்துக்களை பிரித்துக்கொண்டோம். கிருஷ்ணமூர்த்தி செட்டியார் எழுதிவைத்த உயில் பதிவானதாகும். அந்த உயில் என் வசமானது அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வேன். அந்த உயில் படி எனது கணவருக்கு அதில் உள்ள விபரப்படி அதில் கண்ட சர்வே எண் அடிப்படையில் நாங்கள் எனது கணவர் இருக்கும் காலத்தில் பிரித்தபடி அனுபவித்து வருகிறோம். அது எத்தனை சதுரடி என சொல்லப்படவில்லை. அந்த சொத்தானது குடியிருப்பு மனையாகும். எனது கணவர் இறந்தபிறகு அந்த சொத்தில் இருந்த வீட்டினை வாடகைக்கு விட்டுவிட்டு எனது அம்மா வீட்டில் வசித்து வருகிறேன். எனது கணவர் இறந்து 15 ஆண்டுகள் ஆகிறது. அவர் இறந்த சில மாதங்களிலேயே எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன். எனது மகன் இறந்த பிறகு எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன். எனது மகன் இறந்து 10 ஆண்டுகள் இருக்கும். எனது கணவர் உயிருடன் இருந்த காலத்தில் பிரித்துக்கொடுத்த சொத்துக்களுக்கான வரிவகையறாக்கள் எனது கணவர் பெயரில் தான் இருந்து வருகிறது.

மேற்படி சொத்திற்கான வரியாக 6 மாதத்திற்கு ஒருமுறை ரூ.380/– செலுத்தி வருகிறேன். அந்த வீட்டிற்கான மின் இணைப்பு எனது கணவர் பெயரில் தான் இருந்து வருகிறது. அந்த மின் கட்டணங்களை என்னால் குடி அமர்த்தப்பட்டவர்

தான் செலுத்தி வருகிறார். மேற்படி சொத்து எனது கணவர் சம்பாதித்த சொத்து அல்ல. ஆதியில் நடேச செட்டியாரும், அவரை தொடர்ந்து கிருஷ்ணமூர்த்தி செட்டியாருக்கும் பாத்தியப்பட்டதாகும். அருமைநாதன், ராஜா ஆகியோரை எனக்கு தெரியும். எனக்கு எனது கணவர் மூலம் ஒதுக்கப்பட்ட சொத்திற்கு பட்டா கொடுக்கப்படவில்லை. நான் தற்சமயம் நீதிமன்றம் மூலம் எனது கணவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கு பட்டா வழங்க உத்தரவிடவேண்டும் என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி உயில்படி இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி செட்டியார் அவரது வாரிசுகளான 8 நபர்களுக்கும் சொத்துக்களை பிரித்து எழுதிதந்தார். அதன் அடிப்படையில் 8 நபர்களுக்கும் சொத்துக்களை பிரித்து அனுபவித்து வருகிறோம். தாவா சொத்தானது அந்த உயிலின் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டு அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் அனுபவித்து வரும் சொத்த வேறு என்றாலும் நான் வாடகைக்கு விட்டு வரும் சொத்து வேறு என்றாலும் சரியல்ல. எங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடானது திருமஞ்சனவீதியில் உள்ளது. அது மேற்கு திசையை பார்த்து அமைந்துள்ளது. அருமைநாதனும், ராஜாவும் அனுபவித்து வரும் சொத்து என்பது ராஜா அனுபவிக்கும் சொத்து கார்னர் பிளாட்டாகவும். வடக்கு திசையை பார்த்து அமைந்துள்ளது.

அதனை ஒட்டி அருமைநாதன் அனுபவித்து வருகிறார். 1, 2 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களும் எனது சொத்துக்களும் வெவ்வேறு நகர அளவு எண்களைக்கொண்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகளுக்கு பட்டா எண் 18ன் கீழ் மனைவாரி தோராய பட்டா 727 சதுர மீட்டருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் எனக்கு எந்தவிதமான உரிமையும், பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தானது சர்வே எண் 1071 என்று சொன்னால் உயிலின் சர்வே எண் காணப்படவில்லை என்பதால் தவறு என்று சொல்லுகிறேன். கிருஷ்ணமூர்த்தி எழுதிவைத்த உயிலின் படி எனது கணவர் நடேசனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கு மட்டுமே உரிமை கொண்டாடுகிறேன். தற்போது மேற்படி உயிலில் இரண்டு நகர அளவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என தெரிவிக்கிறார். அந்த நகர அளவு எண் எனக்கு ஞாபகம் இல்லை. பிரதிவாதிகள் யாரிடமும் நான் சுமூக உறவுமுறைகள் இல்லை. 7வது பிரதிவாதி மட்டும் என்னுடன் சுமூக உறவில் இருந்து வருகிறார். எனது கணவர் இறந்தபிறகு கிருஷ்ணமூர்த்தி சொத்துக்கள் சம்பந்தமாக உயிலினைப் பார்த்து விபரம் தெரிந்துகொண்டேன். அந்த உயிலின் ஒரு நகல் என்வசம் உள்ளது.

அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் தாவாவில் கூறியுள்ள சொத்து விபரங்களை எனது மாமனாரின் உயிலின் அடிப்படையில் சொத்து விபரங்களை தெரிந்துகொண்டு வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சொத்தில் எனக்கு எந்தவிதமான பாத்தியமும் உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு, இறந்த எனது கணவர் நடேசனுக்கு சேரவேண்டிய சொத்துக்களை பிரிவினை செய்து கொடுத்தார்கள் என்று சொன்னால்

இல்லை. உயிலில் காட்டியுள்ள சொத்தின் நம்பர் படி நாங்கள் பிரித்து அனுபவித்து வருகிறேன்.

மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளதால் 1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.